1982 மார்ச் 22]

வருங்காலத்திலாவது இப்படி கவனிக்கப்படாத இடங்களை உடனடியாகக் கவனிக்க ஆவன செய்யப்படுமா? பலயிடங்களில் ஆதி திராவிடர் குடியிருக்கக்கூடிய இடங்களில் இப்படிப்பட்ட நிலை இருக்கும் இடங்களில் அதைப்போக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, கலெக்டர் அதைச் செய்வார் என்று நான் சொல்லவில்லை. நான் சொன்னதை மீண்டும் படிக்கிறேன்.. குடிநீர் வடிகால் வாரியப் பொறியாளர் அவர்களிடம் கலந்தாலோசித்து, 'தே ஆர் டெக்னிகல் எக்ஸ்பர்ட்ஸ்', அந்தக் குடியிருப்புகளை மாற்றிக் கொள்ளும் அதிகாரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. உதாரணமாக, முதல் பிரிவை எடுத்துக் கொள்வோம். குடியிருப்புகளுக்கு நீர் மூலங்கள் இல்லாத குடியிருப்புகள். இரண்டாவது, குடிக்கத் தகுதியற்ற நீர் மூலங்கள் இருக்கக் கூடிய குடியிருப்புகள். ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் இதற்கு தண்ணீர் கிடைக்கக்கூடிய தகுதி உள்ளதா, இல்லையா என்பதைப் பற்றி பரிசீலனை செய்ய அவரும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் கலந்தாலோசித்து முடிவெடுப்பார்கள். இதிலே சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களைச் சொல்லலாம். தங்களிடம் மக்கள் சொல்வதையும் சொல்லலாம். ஆனால், அதற்கான முடிவுகளை இவர்கள் இருவரும் சேர்ந்து எடுப்பார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

குடிசை மாற்று வாரியப் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் சுகாதாரப் பணிகள்.

*வினா எண் 596—திரு. இரா. கருப்பையா: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடிசை மாற்று வாரியப் பகுதிகளில் சுகாதாரப் பணிகளுக்காக உலக வங்கியிடமிருந்து கடன் பெறப்படுகிறதா?

(ஆ) அந்தக் கடனுக்கு செலுத்தப்படும் வட்டி விகிதம் என்ன?

(இ) கடன் வழங்கும் உலக வங்கி விதித்துள்ள வேறு நிபந்தனைகள் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) மற்றும் (ஆ) ஆம். உலக வங்கியின் நிதி உதவி பெரும்பாலும் வட்டி இல்லாக் கடனாக அளிக்கப்படுகிறது. அந்தக் கடன் உதவிக்கு அவர்கள் நிர்வாகச் செலவிற்காக 3/4 சதவீதம் மத்திய அரசிடமிருந்து

பெறுகிறார்கள். மத்திய அரசால் மாநில அரசுக்கு கடன் வடிவிலும், மானிய வடிவிலும் மத்திய அரசின் கூடுதல் உதவியாக உலக வங்கியின் நிதியுதவி வழங்கப்படுகிறது. இந்தக் கடன் தொகைக்கு $5\frac{1}{2}$ சதவிகிதம் வட்டி செலுத்த வேண்டும். மத்திய அரசு உலக வங்கி நிதி உதவி வாங்கி எல்லா மாநிலங்களுக்கும் ஒரே மாதிரியாகத் தரவேண்டும் அல்லது ஒரே மாதிரியாக கவனிக்க வேண்டும் என்பதற்காக $5\frac{1}{2}$ சதவிகிதம் என்று பொதுவாகப் போட்டு எல்லா மாநிலங்களுக்கும் தருகிற முறையைத்தான், மத்திய அரசு கையாண்டு வருகிறது. உலக வங்கிக்கு இம்மாநில அரசு நேரடியாக எந்தவித வட்டியும் செலுத்துவது இல்லை.

(இ) சுகாதாரப் பணிகளைப் பொறுத்தவரையில் உலக வங்கியின் நிபந்தனைகள் ஏதும் இல்லை.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, சுகாதாரப் பணிகளுக்காகத் தான் இந்தப் பணத்தை உலக வங்கியிடம் கடன் வாங்கி இது நடத்தப்படுகின்றது என்பது ஒரு பக்கம் இருந்தாலும், இந்த சுகாதாரப் பணிகளை குடிசை மாற்று வாரியத்தால் கட்டப்பட்ட பகுதிகளில் சரியான முறையில் நடைபெறாத பெருங்குறை இருந்து வருகிறது. மாநகராட்சி, நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் அப்படிப்பட்ட குடிசைப் பகுதி மாற்று வாரியக் கட்டிடத்தை, வீடுகளை கட்டியுள்ள இடங்களில் அந்த முனிசிபாலிடிக்கே, மாநகராட்சிக்கே அந்தச் சுகாதாரப் பணிகளைக் கவனிக்கும்படி ஒப்படைக்கப்பட்டுள்ளது. அப்படியானால், இவைகளை கவனிப்பதற்கான ஆட்கள் அவர்கள் கையில் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். இதைச் செய்வதற்கு அரசு முன்வந்து ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசைப் பொறுத்தவரையில் பணிகள் மிகவும் சிறப்பாக நடைபெறுவதாகத்தான் தகவல் வந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு, வேறு தகவல் கிடைத்திருந்தால், எங்கெங்கே அப்படிச் சிறப்பாக நடைபெறவில்லை என்கிற தகவலைக் கொடுப்பார்களானால், அதை வைத்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன யோசனையைப் பற்றி பரிசீலனை செய்யலாம்.

சென்னை பெருநகர் திட்டம்.

*வினா எண் 597—திரு. ப. வெங்கட்டசுப்பிரமணியம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையை சுற்றி அமைக்கப்பட இருந்த பெருநகர திட்டம் செயல்படுத்தப்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில், எத்தனை நகர்கள் அமைக்க அரசு கருதியிருக்கிறது ?